සියලුම හිමිකම් ඇවිරිණි]
(முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

# முதலாந் தவணைப் பரீட்சை – மார்ச் 2017

தரம் 10

அக்கரைப்பற்று வலய அதிபர்கள் சங்கம்
அக்கரைப்பற்று

புள்ளி

சுட்டெண்: .........................

## தமிழ் மொழியும் இலக்கியமும் – I

நேரம் : 1.00 மணித்தியாலம்

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- ***1 - 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.***

♦ **பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்திற் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. அணிதேர் புரவி கஆட்பெரும் படையோடு என்ற வரியில் '**புரவி**' என்ற சொல்லின் பொருள்
(1) யானை (2) குதிரை (3) மான் (4) சிங்கம்

02. கண்கள் பின்ழை கார்ந்து களித்திட..... **களிப்பு** என்பதன் ஒத்த சொல்
(1) மகிழ்ச்சி (2) துக்கம் (3) செல்வம் (4) வெற்றி

03. 'மனங் கொண்டது மாளிகை. **மாளிகை** என்பதன் எதிர்க்கருத்தாக அமைவது
(1) கோட்டை (2) குடிசை (3) மடம் (4) அரண்மனை

04. தென்னிந்தியாவில் எழுத்தும் ஒலியும் அவ்வளவாக மாறவில்லை. இங்கு **ஒலி** என்பதன் ஒத்த கருத்துச் சொல்
(1) சத்தம் (2) வெளிச்சம் (3) பிரகாசம் (4) வடிவம்

05. அவசரமாக மக்களை சென்றனர். இங்கு அவசரம் என்பதன் எதிர்ச்சொல்
(1) நிதானம் (2) விரைவு (3) ஓட்டம் (4) சாந்தம்

♦ **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

06. உண்மையை உறுதிப்படுத்தாமலே ஊர் மக்கள் பரப்பும் ஐயத்துக்கிடமான செய்தி
(1) அறிவிப்பு (2) புகார் (3) வதந்தி (4) அறிவித்தல்

07. ஆந்தை அலரும் என்பது போல வானம்பாடி
(1) கீச்சிடும் (2) அலப்பும் (3) கத்தும் (4) பாடும்

08. சந்தையில் Demand பொருட்களின் உற்பத்தியைத் தீர்மாணிக்கும் காரணியாகும். Dimand என்பதன் தமிழ் கலைச் சொல்
(1) கேள்வி (2) சந்தை (3) பொருள் (4) விலை

09. 'அவனும் அவளும்' என்ற நூலை எழுதியவர்
(1) பாரதி (2) நாமக்கல் இராமலிங்கம்
(3) கவிமணி (4) பாரதிதாசன்

10. "நம்மளுவெழுக்கு" இது எவ்வகைப் பிரதேச வழக்கு மொழி?
(1) வடக்கு (2) மேற்கு (3) மலையகம் (4) தென்னிலங்கை



kalvi.lk

♦ **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

11. ஒரே சமயத்தில் பத்து விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் படைத்தவன்
(1) துவிதாவதானி (2) அட்டவதானி (3) தசாவதானி (4) ஞானி

12. காதலியைக் காரிருளிற் காணகத்தே.... இங்கு சீர்தோறும் முதலில் இடம்பெறும் "கா" என்பது
(1) சிலேடை (2) எதுகை (3) மோனை (4) ஓசை

13. கலகம், கழகம், களகம் என்பன முறையே தரும் பொருள்,
(1) சங்கம், குழப்பம், நெற்கதிர் (2) நெற்கதிர், சங்கம், குழப்பம்
(3) குழப்பம், சங்கம், நெற்கதிர் (4) குழப்பம், நெற்கதிர், சங்கம்

14. பெண் யானை பிடி என்பது போல ஆண் யானை
(1) கடா (2) நாம்பன் (3) களிறு (4) கடுவன்

15. புலன ழிந் தொரு எனும் தொடரின் சரியான பதப்பிரிப்பு
(1) புலன் + அழிந்து + ஒரு (2) புலன் + அளிந்து + ஒரு
(3) புலனின் + அழிந்து + ஒரு (4) புலன் + அழிந்தொரு

16. இரு கண்களும் சிவந்தது என்பது
(1) வினாவழு (2) விடை வழு (3) எண்வழு (4) மரபுவழு

17. துன்பந் தரும் ஒன்றைச் சகித்துக் கொண்டிருத்தல் என்னும் பொருள் தரும் மரபுத் தொடர்,
(1) வாலாட்டுதல் (2) வயிறு கழுவுதல் (3) பல்லைக்கடித்தல் (4) வாய்ப்பூட்டுப் போடுதல்

18. அவன் தன்னிடமிருந்த கொஞ்சநஞ்சப் பணத்தையும் வைத்தியத்திற்காக செலவிட்டான். கொஞ்சநஞ்சம் என்ற இணைமொழி தரும் பொருள்,
(1) சிறிதளவு (2) பெருந்தொகை (3) சேகரித்த தொகை (4) கணிசமான அளவு

19. சரியான வழிகாட்டி இல்லாத சமூகம் திசைமாறிப் போவதைக் குறிக்கும் உவமைத் தொகைத் தொடர்
(1) வலையிற் சிக்கிய மான் போல
(2) மீகாமன் இல்லாத மரக்கலம் போல
(3) அம்மி துணையாக ஆற்றில் இறக்கியது போல
(4) உரியில் வெண்ணெய் இருக்க ஊரெல்லாம் நெய்க்கு அலைவதைப் போல

20. அவள் நற்குணமும் அழகும் உடையவள். இங்கு இடம்பெற்றுள்ள இணைப்பிடச் சொல்,
(1) ஆனால் (2) ஆகவே (3) உம் (4) உடை

21. கடினமான காரியமாயினும் அதை மீண்டும் மீண்டும் செய்ய முயன்றால் வெற்றி பெறலாம் என்ற கருத்தைத் தரும் பழமொழி
(1) அடுத்து முயன்றாலும் ஆகுநாளே ஆகும். (2) அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்
(3) ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு (4) பதறாத காரியம் சிதராது

22. பாலாவது அல்லது பழமாவது தாருங்கள். இவ்வாக்கியத்தில் பொருள் சிதையாதவாறு விலக்கிவிடக்கூடிய ஒரு சொல்
(1) பாலாவது (2) தாருங்கள் (3) பழமாவது (4) அல்லது



kalvi.lk

23. உயர்திணை இருபாற் பொதுப் பெயர்
(1) தாய் (2) மாடுகள் (3) மனைவி (4) பேதை

24. மெய்யெழுத்துக்கலை க், ச்ஈ ட், த், ப், ற் என்பது,
(1) வல்லினம் (2) மெல்லினம் (3) இடையினம் (4) சார்பெழுத்து

25. "ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவு....." என்பதில் "உறு" என்பது,
(1) பெயர்ச்சொல் (2) இடைச்சொல் (3) உரிச்சொல் (4) வினைச்சொல்

26. வெளிப்படையான பொருளில் புகழ்ந்தும் மறை பொருளில் இகழ்ந்தும் கூறுவது,
(1) அணிந்துரை (2) அஸ்கிதம் (3) எதுகை (4) சால்பு

27. நீ எவ்வளவுதான் கெஞ்சிக் கேட்டாலும் நான் இதைக்
(1) கொடுப்பேன் (2) கொடுத்தேன் (3) கொடேன் (4) கொடுப்பேனில்லை

28. தலையால் வாங்கினான் என்பதில் "ஆல்" உருபு ஏற்றுவரும் வேற்றுமை
(1) 2ஆம் வேற்றுமை (2) 3ஆம் வேற்றுமை (3) 5ஆம் வேற்றுமை (4) 6ஆம் வேற்றுமை

29. பின்வருவனவற்றுள் வந்த குணப்பெயர்,
(1) நடத்தல் (2) மைதானம் (3) வெண்மை (4) கோடை

30. சீப்பின் பற்கள் சிதறி விழும்படி அத்தனை அடர்த்தியாகவும் இருந்தது அவள் கூந்தல். இவ்வாக்கியத்தின் எழுவாய்,
(1) அவள் (2) பற்கள் (3) கூந்தல் (4) சீப்பு

- **பின்வரும் வாக்கியங்களில் புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்குப் பொருத்தமான எழுத்துப் பிழையற்ற சொல்லைத் தெரிவு செய்து நிரப்புக.**

31. கவி மணியின் பாடல்கள் .................................... இனிமையும் நிறைந்தவை.
(1) எழிமையும் (2) எலிமையும் (3) எழுமையும் (4) எளிமையும்

32. பாரதியின் ............................ப் பார்வை பாஞ்சாலியிடம் இந்தியா நாட்டைக் கண்டது.
(1) புரட்சி (2) புறட்சி (3) புறற்சி (4) புரற்சி

33. அரச குமாரிகள் ............................., அது அவர்கள் அழகிற்கும், மேன்மைக்கும் மனவைராக்கியத்துக்கும் ஒரு இழுக்கு என்பதால்,
(1) அளுவதில்லை (2) அழுவதில்லை (3) அலுவதில்லை (4) அழுவதிள்ளை

34. ஆலயம் தொழுவது .............................. நன்று.
(1) சாளவும் (2) சாலவும் (3) சாழவும் (4) சாலையும்

35. தினமும் .............................. அழைக்கண்டு மகிழ்வோம்
(1) இயற்கை (2) இயட்சை (3) இயர்க்கை (4) யியற்கை


kalvi.lk

- **பின்வரும் பந்தியின் பிரதான கருத்தைத் தருக.**

மூளை என்ற ஆய்வுகூடத்தில் விஞ்ஞானம் பிறந்தது. இதமென்ற ஆய்வு கூடத்தில் கலை பிறந்தது. விஞ்ஞானமும் கலையும் இணைந்து நாகரிகம் பிறந்தது. மனிதனுக்கு நாகரிகம் உண்டு. மிருகத்திற்கு இல்லை மனிதன் உயர்திணை. மிருகம் அஃறினை இருந்தும் இந்த உயிர்திணை நாகரிக ஜீவிக்கு மிருகத்தின் அமைதி இல்லை.

36. (1) மனிதன் அமைதியின்றித் தவிக்கின்றான்
(2) மிருகம் அமைதியோடு வாழ்கின்றது.
(3) இருதிணைப் பாகுபாடு பற்றிய விளக்கம்
(4) விஞ்ஞானமும் கலையும் நாகரிகத்தைப் பிறப்பித்தது.

- **பின்வரும் வினாக்களிலுள்ள வாக்கியத்தின் முற்பகுதிக்கும் மிகப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.**

37. மண் சரிவினால் வீடுகள் பல ...................
(1) இடிந்தது (2) இடியும் (3) இடிந்தன (4) இயற்றியது

38. காட்டில் உலாவும் மான்களின் கூட்டம்
(1) அழகுடையனவாய் இருந்தன. (2) அழகுடையதாய் இருந்தது.
(3) அழகுடையனவாய் இருந்தது. (4) அழுகுடையதாய் இருந்தன.

39. பின்வருவனவற்றுள் எழுத்துப் பிழையற்ற சொற்கூட்டம்
(1) கைமாறு, செய்நன்றி, மெய்ஞ்ஞானம்
(2) நிலையம், உயர்ச்சி, எழுச்சி
(3) கைம்மாறு, செய்ந்நன்றி, மெய்ஞ்ஞானம்
(4) நிலையம், இணக்கம், எடுகோல்

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக் கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்கு மிகப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.
அ) ஓடி விடலாம் என எழுந்தேன்
ஆ) அவள் தன் வயிறு நிறையும் மட்டும் இனிய பண்டங்கள் உண்ணத் தந்தாள்.
இ) அந்த நேரத்தில் அவளுடன் தனியே இருக்க மனம் சிறிது துணுக்குற்றது.
ஈ) என்னோடு எத்தனையோ காலம் பழகிய மச்சானாக இருந்தும்
(1) இ, அ, ஆ, ஈ (2) ஆ, ஈ, இ, அ (3) ஆ, இ, அ, ஈ (4) இ, ஆ, அ, ஈ

(40 x 1 = 40 புள்ளிகள்)



kalvi.lk

සියලුම හිමිකම් ඇවිරිණි]
(முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

# முதலாந் தவணைப் பரீட்சை – மார்ச் 2017

தரம் 10

அக்கரைப்பற்று வலய அதிபர்கள் சங்கம்
அக்கரைப்பற்று

புள்ளி

சுட்டெண்: .........................

## தமிழ் மொழியும் இலக்கியமும் – II

நேரம் : 2.00 மணித்தியாலம்

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. சுருக்கமான விடை எழுதுக.

i) பின்வரும் தொடரைப் பிரித்து எழுதுக.
"விலங்கி யற்கையிலை யெனில் யாமெலாம்"

ii) பின்வரும் வாக்கியத்தின் எழுவாய் பயனிலையைக் குறிப்பிடுக.
அவள் நோக்கு எனக்கு சங்கடமாக இருந்தது.

iii) பின்வரும் பேச்சு வழக்குத் தொடரை எழுத்து வழக்குத் தொடராக மாற்றி எழுதுக.
"உம்மிலை என்ன கிடக்குது பார்க்கிறதுக்கு! ஓகோ அப்படியோ உமக்கு யோசனை"

iv) பின்வரும் தனிவாக்கியங்களைக் கூட்டு வாக்கியமாக்குக.
நான் நன்றாகப் படிக்கிறேன்.
நான் பரீட்சையில் சித்தியடைவேன்.

v) பழங்காலத் தமிழர் பயன்படுத்திய எழுத்து எவ்வாறு அழைக்கப்படுகிறது?

vi) தொழில் முறைக் கடிதத்தின் அமைப்பினைக் குறிப்பிடுக.

vii) கவிஞர் இ.முருகையின் "முயற்சி" என்ற கவிதை இடம்பெற்றுள்ள கவிதைத் தொகுப்பு எது?

viii) "உண்டனன்" இதனைப் பரித்து எழுதுக.

ix) பால் வழுவமைதி எனபதற்கான விளக்கத்தினைத் தருக.

x) பின்வரும் சொற்கள் எப்பிரதேசத்துக்கு வழக்கு சொற்கள் என இனங்கண்டு எழுதுக.
காத்து, பத்தை, மடுவம், அன்ன (10x 2 = 20 புள்ளிகள்)

02. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.

அ) இன்று பல நவீன கண்டு பிடிப்புக்கள் அறிமுகமாகி விட்டன பெண்களும், பிள்ளைகளும் சொகுசாக வாழப் பழகிவிட்டனர் எனினும் இவற்றினால் பாதகங்களும் ஏற்படாமலில்லை. நவீன கண்டு பிடிப்புகளால் ஏற்படம் சாதக, பாதக நில பற்றிய விளக்கக் கட்டுரை.

ஆ) தற்காலத்தில் எமது நாடு கல்வியிலும் ஏனைய துறைகளிலும் முன்னேறியிருந்தாலும் மக்களின் மனப்பாங்கு விருத்தியில் பிள்ளடைவே கண்டுள்ளது. இது குறித்து நீர் மாணவர் மன்றத்தில் நிகழத்தும் சொற்பொழிவு

இ) அதிகரித்து வரும் சுகாதாரச் சீர்கேடுகளும் உணவுப் பழக்கவழக்கங்களுமே இன்று எண்ணற்ற நோய்கள் தோன்றக் காரணமாயுள்ளன. இதற்குப் பிரதான காரணம் மக்களது கவனக்குறைவேயாகும். இவ்வாறான கருத்துக்களை உள்ளடக்கியதாக இருவருக்கிடையிலமைந்த உரையாடல் ஒன்று எழுதுக.

ஈ) சாந்தன் ஏழைச் சிறுவன் குடிகாரத் தந்தையின் குடும்பப் பொறுப்ற்ற செயல்களினால் அவனது தாய் வீடு வீடாகச் சென்று கூலி வேலை செய்து கிடைக்கும் பணத்தினைக் கொண்டு நாறாந்தம் வயிற்றைக் கழுவுவதுடன் தனது பிள்ளை சாந்தனை நல்லநிலைக்கு ஆளாக்க வேண்டம் என்ற குறிக்கோளில் சோதனையும் வேதனையும் நிறைந்த வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கின்றாள். இப்பிரச்சினையால் மன நொந்து கொண்ட சாந்தன் தனது எதிர்கால இலட்சி கணவுடன் கல்வியைத் தொடர் உறுதி கொண்டான். இம்மனப்பதிவினைக் கொண்டு ஒரு சிறுகதை. (25 புள்ளிகள்)



kalvi.lk

03. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை **40 - 45** சொற்களில் அமையுமாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)

தமிழ் என்னும் பெண் அணங்கு தன்னை அலங்கரிப்பதற்காக ஐம்பெரும் காப்பியங்கள் எனும் ஆபரணங்களை அணிந்து தமழன்னை என்னும் இறுமாப்போடு நிமிர்ந்து நிற்க கணினியே உதவிற்று எனலாம். அந்த வகையில் தமிழன்னையின் காவல் வரம்பாகிய இலக்கணம் தொடக்கம் இலக்கிய மரபு பாரிய சொற்சுவை பொருட்சுவை உடைய காப்பியஙகள் கவிதைகள் வரை கணினியில் பார்வையிடக்கூடிய வசதிகள் இன்றி எமக்குக் கிடைத்துள்ளது.

இலக்கியம் என்பது வெறுமனே மகழிவிக்கக் கூடியதொன்றாக மட்டுமல்லாது அனுபவமும் அறிவியலும் தொழில் நுட்பமும் கலந்த படைப்பாகவே காணப்படுகிறது. நாம் நினைத்தவுடன் எந்தவொரு சங்க இலக்கியங்களையும் எழுத்து வடிவிலே கானொலி வடிவிலே பார்க்கக் கூடிய வசதி இன்று எமக்கு கிடைத்துள்ளது என்றால் கணினியே மூல காரணமாகும். கணனி மூலம் எமக்குத் தேவையான இலக்கிய இலக்கணப் படைப்புக்களையும் அதன் வரலாறு என்பவற்றையும் பெறக்கூடிய வகையில் இருக்கின்றது. இதனால் கணினி மக்களின் தேவையையும் நேர கால சுருக்கத்திற்கும் வழிகாட்டுகின்றது எனவும் குறிப்பிடலாம். (10 புள்ளிகள்)

04. பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

முற்காலத்தில் சமன முனிவர்களால் தமிழ் இலக்கியங்களை அறிதற்கு கருவியாயுள்ள நிகண்டு நூல்கள் இயற்றியவாறே பிற்காலத்தில் கிறிஸ்தவத் தொண்டர்கள் அகராதி நூல்கள் தொகுத்து உதவினர். "அகர முதல் எழுதெல்லாம்" என்று திருவள்ளுவர் கூறிய முறையில் தமிழ் மொழியில் வழங்கும் சொற்களை அகரம் முதலாக வரிசைப்படுத்திப் பொருள் விளக்கும் நூலே அகராதி எனப்படும். இத்தகைய அகராதியை முதன்முதல் தழிழலகத்திற்கு அளித்தவர் வீரமாமுனிவரேயாவர். அவர் தொகுத்த அகராதி நான்கு பகுப்புடையதாய் விளங்கிற்று. ஆதலால் சதுர அகராதி என்று பெயர் பெற்றது.

அ) அகராதி என்றால் என்ன என்பதைனக் குறிப்பிடுக.

ஆ) தமிழ் உலகுக்கு அகராதியை அறிமுகம் செய்து மகான் யார்?

இ) இப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள திருக்குறளைக் குறிப்பிடுக. (முழுமையாகக் குறிப்பிட வேண்டும்)

ஈ) "நிகண்ட" நூலின் பயன்பாடு யாது? (10 புள்ளிகள்)

05. மார்ச் 8ஆம் திகதி மகளிர் தினம் கொண்டாடப்படுவதன் நோக்கம் பற்றி விளக்கம் கேட்டு உமது உமது நண்பனுக்கு 100 சொற்களில் ஒரு கடிதம்

**அல்லது**

மார்ச் மாதம் 8ஆம் திகதி மகளிர் தினம் என்ற தலைப்பில் ஒரு துண்டுப் பிரசுரம். (15 புள்ளிகள்)



kalvi.lk

සියලුමහිමිකම් ඇවිරිණි]
(முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

# முதலாந் தவணைப் பரீட்சை – மார்ச் 2017

தரம் 10

**அக்கரைப்பற்று வலய அதிபர்கள் சங்கம்**
**அக்கரைப்பற்று**

புள்ளி

சுட்டெண்: ........................

## தமிழ் மொழியும் இலக்கியமும் – III

நேரம் : 2.00 மணித்தியாலம்

**கவனிக்க வேண்டியவை:**

- அறிவுறுத்தலுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- *1, 2, 3, 4* ஆகிய வினாக்களுக்கும் 5, 6, 7ஆம் வினாக்களில் யாதேனும் ஒருவினாவுக்கும் விடை எழுதுக.

*01.* பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை எழுதுக.

i) வண்டோ கானத் திடைமிருந்து வந்து
கமல மதுவுண்ணும்

அ) வண்டு எங்கிருந்து வந்தது?

ஆ) கமலம் என்பதற்குப் பொருத்தமான ஒரு சொல் தருக.

ii) அ) வெற்றி வேற்கை என்ற நூலை எழுதியவர் யார்?

ஆ) பெரியோரெல்லாம் பெரியாருமல்லர்
சிறியோரெல்லாம் சிறியாருமல்லர் என்பதன் கருத்து யாது?

iii) அடக்கம் உடையார் அறிவிலர் என்று எண்ணிக்
கடக்கக் கருதவும் வெண்டா......

அ) இப்பாடல் எந்த நூலில் இடம்பெற்றுள்ளது?

ஆ) இப்பாடலில் அடக்க முடையவரை எவற்றுக்கு ஒப்பிடப்பட்டுள்ளது?

iv) கணக்காயரில்லாத வூரும் பிணக்கனுக்கு
மூத்தோரையில்லா வவைக்காரனும்

அ) இப்பாடலடியில் குறிப்பிடப்படும் இரு இடங்கள் எவை?

ஆ) இப்பாடலை எழுதியவர் யார்?

v) உப்பிலாக் கஞ்சியினை யுண்ணுமறு அவைபோல்
தம்பிய கந்தை பீதாம் பரம் போல்...

அ) பீதாம்பரம் என எதனைக் குறிப்பிடப்படுகிறது?

ஆ) இப்பாடலைப் பாடிய கவிஞர் யார்?

vi) யானை அனையவர் நண்பொரீஇ நாயனையார்...

அ) இப்பாடலில் எதனின் இறப்பு கூறப்பட்டுள்ளது?

ஆ) நாயைப் போன்ற நற்பு சிறந்ததாக கூறப்படுவதன் காரணம் யாது?

vii) அ) இனியவை நாற்பதில் இனியவை எனக் குறிப்பிடப்படுவதில் இரண்டினைத் தருக.

ஆ) எட்டுணை என்பதனை பிரித்து எழுதுக.

viii) அ) சென்னை சர்வகலாசாலையார் முதன் முதல் நடாத்திய பி.ஏ. பரீட்சையில் யாழ்ப்பாணத்தவர்கள் இருவர் சித்தி எய்தினர். அவர்கள் இருவரும் யாவர்?

ஆ) நாவலர் எழுந்தார் என்ற கட்டுரையில் இலங்கைச் சட்டசபையில் இலங்கை பிரதிநிதித்துவத்திற்குப் போட்டியிட்டவர்கள் இருவரும் யாவர்?



kalvi.lk

ix) பொழிந்த நெய் யாகுதி வாய் வழி பொங்கி
எழுந்த கொழுங்கனலென்ன எழுந்தார்.

அ) இப்பாடலடியில் "எழுந்தார்" என யாரைக் குறித்துக் கூறப்படுகின்றது?

ஆ) கொழுங்கனலென்ன என்பதன் பொருள்

x) நாவலர் எழுந்தகர் என்ற கட்டுரையின் அடிப்படையில்,

அ) இலங்கை சட்டசபைக்குத் தெரிவானவர் யார்?

ஆ) எவர்களுக்கிடையில் வழக்கு நடந்தது? (20 புள்ளிகள்)

02. பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

i) அடக்கம் உடையார் அறிவிலர் என்று எண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா மடைத் தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு

அ) மடைதலையில் என்பதற்கான கருத்தினையும் ஏன் கொக்கு வாடி நிற்கின்றன என்தற்கான காரணத்தனையும் தருக.

ஆ) இப்பாடலின் மூலம் எவ்விடயம் வெளிப்படுத்தப்படுகின்றது?

ii) கண்ககாய ரில்லாத வூரும் பிணக்கனுக்கு
மூத்தோரை யில்லா வவைக்களனும் - பாத்துண்ணுந்
தன்மையிலான ரயலிருப்பு மிம்மூன்று
நன்மை பயத்தலில.

அ) இப்பாடில் குறிப்பிட்ட நன்மை பயக்காத விடயங்கள் யாவை?

ஆ) இப்பாடல் குறிப்பிடப்படும் மூன்று மருந்துச் சரக்குகளும் யாவை?

iii) உப்பிலாக் கஞ்சியினை யுண்ணுமறு சுவைபோல்
தப்பிய கந்தை பீதாம் பரம்போல் ஓப்பும்
பனை யோலைப் பாயிற் படுத்துங்கவும் வாழ்வார்
மனங் கொண்டது மாளிகை.

அ) இப்பாடலில் குறிப்பிட்டுள்ள பழிமொழி யாது?

ஆ) இப்பாடலில் எவ்வாறான மனப்பக்குவத்தை வெளிப்படுத்துகின்றது?

iv) பிறிற்றோ என்பவர் பிரசித்தி பெற்ற பழுத்த வழக்கறிஞர். அக்காலத்து சட்ட நிபுணர்களுள்ளே தலைசிறந்தவர் அவர். இலங்கையிலேயுள்ள எல்லாரும் அவரை அறிவர். பொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் அவருக்கு பெரிய பேர் பாரிய வழக்குகளுக்கும் அப்பீல்களுக்கும் அவரை நியமிப்பதம் வழக்கம். அவருக்கு யாழ்ப்பாணதில் அளவுகடந்த செல்வாக்கு அந்த நாட்களில் இருந்தது.

அ) பிறிற்றோவின் சிறப்பம்சங்கள் யாவை?

ஆ) பறிற்றோ எப்பிரதேசங்களில் செல்வாக்குடையவராக விளங்கினார்?

v) பிரசண்ட மாருதத்திற்குப் பிறது என்று சொல்லுகின்ற 'பிறகு' அந்த சபையில் நிலவியது பேச்சு மூச்சு ஒன்றும் இல்லை. மேலே கிளம்பின பிறிற்றோ கட்சியினர் மெல்ல மெல்ல கீழே இறங்கித் தரைமட்டத்திற்கு வந்து விட்டார்கள் தபால் தந்திக்கட்டுக்கள் நாவலர் அவர்களின் முன்னிலைக்கு வந்து சேர்ந்தன. "ஒருவர் ஒருவராகவோ, இருவர் இருவராகவோ அன்றிப் பலர் கூட்டாகங் கூட்டமாகவோ வாதத்திற்கு வரலாம்" என்றார் நாவலர் அவர்கள்.

அ) "பிறகண்ட மாருதத்திற்குப் பிறது" என்ற கூற்று எதனை வெளிப்படுத்துகின்றன?

ஆ) பிறிற்றோக் கட்சியினர் சபையைவிட்டு கீழே இறங்கி நழுவிச் செல்லக் காரணம் யாது?(20 புள்ளிகள்)



kalvi.lk

03. விவேக சிந்தாமணி எனும் பாடலில்,

அ) அறிவுடையோர், அறிவற்றோர் இயல்பு தொடர்பாக வெளிப்படுத்தப்படுமாற்றினை விளக்குக. (10 புள்ளிகள்)

ஆ) இப்பாடலில் கையாளப்பட்டுள்ள அணியினையும் அணிவிளக்கத்தனையும் தருக. (05 புள்ளிகள்)

**அல்லது**

பாரதியார் சுயசரிதை பிள்ளைக்காதல் என்ற பாடத்தில்,

அ) மனிதர்கள் தான் விரும்பிய இலக்கினை அடைய முடியாமை தொடர்பாக விளக்குக. (05 புள்ளிகள்)

ஆ) கவிதையில் இடம்பெற்றுள்ள உவமை மூன்றினை எடுத்துக்காட்டி விளக்குக. (10 புள்ளிகள்)

04. வெற்றி வேற்கைப் பாடலில்,

அ) பெரியோர், சிறியோர் என்ற தோற்றம் தொடர்பாக வெளிப்படுத்தப்படுமாற்றினை விளக்குக. (10 புள்ளிகள்)

ஆ) இப்பாடலில் வெளிப்படுத்தப்படும் நீதிக்கருத்தினை வெளிப்படுத்துக. (05 புள்ளிகள்)

**அல்லது**

அ) நாவலர் அவர்கள் சபைக்குச் சென்று தபால் கட்டுக்களைக் கொண்டு வா என்று கூறியதன் பின்னியை விளக்குக. (08 புள்ளிகள்)

ஆ) நாவலர் அவர்கள் வாதமா சபையை நோக்கிச் சென்ற தோற்றத்தினையும் வேகத்தினையும் விளக்குக. (10 புள்ளிகள்)

- பின்வரும் **05, 06, 07** வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து விடை எழுதுக.

05. நாலடியார் என்ற பாடலில்,

அ) கூடாத நட்பு சிறந்த நட்பு தொடர்பாக விளக்குமாற்றினை விளக்குக. (06 புள்ளிகள்)

ஆ) இப்பாடலில் மூலம் வலியுறுத்தப்படும் நீதிக்கருத்துக்களைத் தொகுத்துத் தருக. (04 புள்ளிகள்)

06. இனியவை நாற்பது எனும் பாடலில்,

அ) உலகில் இன்பம் தரவல்ல விடயங்கள் எவைகளென விளக்கப்பட்டுள்ளது? (06 புள்ளிகள்)

ஆ) இன்று முன்வைக்கப்படும் நீதிக் கருத்துக்கள் எவை? (04 புள்ளிகள்)

07. நீதிப்பாடல்களில் (எல்லாப் பாடல்களிலும்) வலியுறுத்தப்படும் நீதிக் கருத்துக்களைத் தொகுத்துத் தருக. (10 புள்ளிகள்)



kalvi.lk

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by
**Pathmanathan Pathmaraj**
(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**
**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page